## தலைப்பு 20 – தேர்தல்கள் ஆணைக்குழு

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6.1 (ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.3(அ) ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக கடந்த ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் அத்தேவைப்பாடுகள் மீறப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் 1003 மற்றும் 1101 செலவு விடயங்களின் மீதியானது திறைசேரி கணக்குக் கூற்றுக்களுடன் சரியாக ஒப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளைத் தீர்த்து வைக்கும் நடைமுறையை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆணைக்குழுவின் புத்தகங்களில் சுட்டிக் காட்டப்படுகின்ற அனைத்து கணக்கு மீதிகளை 2019 ஆம் ஆண்டிற்கான இறுதி திறைசேரி கணக்கு | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |

| | | |
|---|---|---|
| | கூற்றுக்களின் கணக்கு தகவல்களுடன் ஒப்பீடு செய்து முரண்பாடுகள் இல்லை என உறுதிப்படுத்துதல் வேண்டும். | |
| (ஆ) காசுப்பாய்ச்சல் கூற்றானது சரியான படிவத்திற்கு இணங்க தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் ஏசீஏ-சீ படிவத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |

**1.6.2 நிதி செயலாற்றல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 95,536,927 தொகையான ஏனைய பெறுவனவுகள் நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 27,164,554 என ரூபா 68,372,373 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சான்றுப்படுத்தப் படுகின்ற இறுதி திறைசேரி கணக்கு கூற்றுக்களிலுள்ள தகவல்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |

**1.6.3 நிதி நிலைமை தொடர்பான கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதியினுள் மாவட்ட அலுவலகங்களினால் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | மீளாய்வாண்டில் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட அனைத்து பொருட்களின் கிரயமும் இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் வாகனங்களின் பெறுமதிக்கும் நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பான மீதிக்கும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அத்திகதியில் உள்ளவாறான மீதிக்குமிடையே ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் காணப்பட்டன. | வாகனங்களின் சரியான பெறுமதி பதிவு செய்யப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |
| (இ) | மீளாய்வாண்டில் 20-1-1-2105 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் காணிகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 985,613 செலவு ஆண்டில் மூலதனமாக்கப்பட்டு நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மூலதனமாக்கப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது இறுதி நடவடிக்கைகளை முடிவுறுத்தாக யாழ்ப்பாண மாவட்ட செயலக கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 33,208,354 பெறுமதி நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் முடிவுறுத்தப்படாத வேலை (61131), அலுவலக கட்டிடங்கள் (6113109) என்பவற்றின் கீழ் மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும், அது நிலையான சொத்துக்கள், கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் முடிவுறுத்தப்படாத வேலைகளின் 61131 கீழ் குறிப்பிடப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |

### 1.6.4 பதிடுேகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேட்டினை நாளது வரையாக பேணுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |

### 1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 1647 | ஆணைக் குழுவிற்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான மீளாய்வு நடாத்தப்பட்டிருக்க வில்லை. | வருடாந்தம் மீளாய்வு நடாத்தப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். அடுத்துவரும் ஆண்டிலிருந்து மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது |
| (ii) | நிதிப்பிரமாணம் 139(8) | மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்ட பணமாகிய ரூபா 3,872,689 திணைக்கள செலவுப் | மேற்கொள்ளப்பட்ட சில செலவுகளை நிர்ணயிக்கப்பட்ட பதிவேடுகளில் பதிவு செய்து முறைப்படி கணக்கீடு செய்தல் வேண்டும். 2018 ஆம் ஆண்டில் திறைசேரி அச்சுப் பிரதிகளுக்கிணங்க | 2019 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் 2019 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவுகள் இடம்பெற்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பேரேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. | செலவுகள் பதியப்படுகின்ற சந்தர்ப்பத்தில் செலவுப் பேரேட்டிலேயே பதியப்படுதல் வேண்டும். | |
| (ஆ) | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் ஏசீஏ-சீ மாதிரிப் படிவம் | | | |
| | 3.1 ஆம் பந்தி | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் இறுதி திறைசேரி கணக்கு கூற்றுக்களின் பின்னிணைப்பாக உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | இறுதி திறைசேரி கணக்கு கூற்றுக்களின் பின்னிணைப்பாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் படுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |
| (இ) | உள்ளகச் சுற்றறிக்கை<br>-------------------- | | | |
| (i) | 2019 செப்தெம்பர் 24 ஆந் திகதிய PRE/2019/06 ஆம் இலக்க கடிதத்தின் 2.9.2 ஆம் பந்தி | மட்டக்களப்பு மாவட்ட பெறுகைக் குழுவிற்குரிய வருகைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | 2.9.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2019 - சனாதிபதி தேர்தல் தொடர்பாக உருவாக்கப்பட்ட குழுக்களின் பதவியணியினர் களின் வருகைப் பதிவேடானது தேர்தல்களின் பின்னர் மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்கப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். எதிர்கால பெறுகை நடவடிக்கைகளின் போது சரி செய்வதற்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. |
| (ii) | 2.7.1 ஆம் பந்தி | மட்டக்களப்பு மாவட்ட பெறுகை குழுவினால் பெறுகைத் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | 2.7.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2019 சனாதிபதி தேர்தல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய பெறுகைகளுக்குரிய பெறுகைத் திட்டத்தை தயாரித்தல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். எதிர்கால பெறுகை நடவடிக்கைகளின் போது சரிசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் 20-1-1-2509 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் தேர்தல்கள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 5,050,000 தொகையான முழுப் பணமும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் பதவியணியினர்களைப் பயிற்றுவித்தல் செலவு விடயத்திலும் ரூபா 2,264,212 சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடைமுறைச் சாத்தியமாக செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் முறையான பயிற்சி திட்டம் வைத்திருக்கப்படுதல் வேண்டும். | இவ்வாறான ஒரு செயற்திட்டம் தேர்தல்கள் ஆணைக்குழு அறிந்துகொண்டு அமுல்படுத்தப்படாததனால் செலவுத் தேவைப்பாடு உருவாகியிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவினால் ரூபா 10,955,000 நிதிஏற்பாட்டு ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட 15 செயற்பாடுகள் முழுமையாக இடம்பெற்றிருக்கவில்லை. | திட்டமிட்டவாறு செயற்பாடுகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். | இச்செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதனால் செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. பின்னர் பெறுகைத் திட்டமானது முன்னுரிமைக்கிணங்க திருத்தம் செய்யப்பட்டது. |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அந்த ஆண்டிலேயே பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அச்செயற்பாடு 2020 ஆம் ஆண்டின் போதும், பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்டவாறு நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்கு முயற்சிகள் எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட மழையின் காரணமாக 60 நாட்கள் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டது. கட்டிடத்தை சுற்றி மதில் நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக குடியிருப்பதற்காக செல்வதற்கு தாமதமடைந்திருந்தது. |
| (ஆ) | தேர்தல்கள் முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்யும் கணனி முறைமையைத் தயாரிப்பதற்காக அரசாங்க பாதுகாப்பு அமைச்சிற்கு ரூபா 1,952,500 தொகை 2017 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடு மீளாய்வாண்டின் இறுதிவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்பாட்டை முடியுமான அளவு விரைவாகப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்நிறுவனம் ஒரு அரசாங்க நிறுவனமாக இருப்பதனால் உரிய முறைமையில் முழு வேலைப் பூர்த்திக்குமான மொத்தப் பணமும் செலுத்தப்பட்டது. உரிய முறைமையின் பிழைகளை நிவர்த்தி செய்து தருமாறு 2019-12-30 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல் முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்ளாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| தேர்தல்கள் முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்யும் கணனி முறைமையைத் தயாரிக்கும் போது அதிலுள்ள mobile app இனை உருவாக்கும் செயற்பாட்டிற்காக ரூபா 325,000 அரசாங்க பாதுகாப்பு அமைச்சிற்குச் செலுத்தப்பட்டிருந்தும் அச்செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய செயற்பாட்டை முடியுமான அளவு விரைவாக முடிவுறுத்த வேண்டும். | செலுத்தப்பட்ட பணத்தை ஆணைக்குழுவிற்கு வழங்கும் நடைமுறை இல்லாமையினால் முறைமையினை நாளதுவரையாக்கித் தரலாம் என தெரிவிக்கப்பட்டது. இந்தவசதி தேவையற்றது என தீர்மானிக்கப்பட்டிருந்தது. |

## 3.4 காலதாமதத்தின் பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| யாழ்ப்பாண மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்காக புதிய ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக தொடக்க புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகள் ஆரம்பிக்க வேண்டிய திகதியின் பின்னர் 06 மாதங்கள் கடந்து நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் முற்பணமாக ரூபா 12.42 மில்லியன் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு 3½ மாதங்களுக்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டிடங்கள் திணைக்களத்தின் மூலம் பெறுகைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக இத்தாமதம் ஏற்பட்டுள்ளது. |

## 3.5 ஏனைய அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குப் புறம்பாக ரூபா 2,285,000 செலவில் மேற்கொள்ளப்பட்ட 06 செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய ஒரு உத்தியோகத்தர் நிறுவனத்தினால் பெயரிடப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டு நிறைவேற்றப் படுகின்ற அனைத்து செயற்பாடுகளுக் காகவும் மேற்பார்வைக்காக பொறுப்புமிக்க ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்படுதல் வேண்டும். | தவறுதலாக உத்தியோகத்தர் பெயரிடப்பட்டிருக்கவில்லை |

## 3.6 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) ரூபா 1,619,085 பெறுமதியான பூட்டுத் திறப்புக்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக முறைப்படியாக மனுக்களைத் திறக்கும் அறிக்கை பேணப்படாதிருந்ததுடன் கேட்பு மனுக்களைத் திறக்கும் குழுவின் ஒரு அங்கத்தவர் மாத்திரம் பதிவேட்டில் கையெழுத்திட்டிருந்தார். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ஆம் பந்தியின் பிரகாரம் கேட்பு மனுக்களைத் திறத்தல் தொடர்பான நடவடிக்கை நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அறிக்கையிடப்பட வேண்டியதுடன் அந்த அறிக்கை குறிப்பில் கேட்பு மனுக்களைத் திறக்கும் அனைத்து அங்கத்தவர்களும் கையொப்பமிடுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். குறுகிய காலத்தில் செயற்பாடுகளை மேற்கொண்டதன் காரணமாக இவ்வாறு இடம்பெற்றுள்ளது. எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாமைக்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆணைக்குழு வளவில் ஒரு புதிய வாகனத் தரிப்பிடத்தை நிர்மாணிக்கும் செயற்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பெறுகைச் செயற்பாட்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட ஒப்படைத்தல் கடிதம் முறைப்படியாகத் தயாரிக்கப்பட்டிராததுடன் 05 சந்தர்ப்பங்களின் போது தயாரிக்கப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையானது முறைப்படியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை ரூபா 250,000 இனை மிகைத்த வேலை ஒப்பந்தங்களுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |
| (இ) | மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட கிரய மதிப்பீட்டில் நிருவாகக் கிரயமானது நேரடி ஒப்பந்த கிரயத்தில் 2 சதவீதமாகும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2 ஆம் பந்திகளின் பிரகாரம் நிருவாகக் கிரயமானது மொத்த நிர்மாணக் கிரயத்தில் 1 சதவீதத்தினை விடக் குறைதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்தினால் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்யும் கடிதம் இணைக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்கும் போது ரூபா 763,807 தொகையான மேலதிக செயற்பாடுகள் நிறுவன தலைவரின் முன் அங்கீகாரமின்றி இடம்பெற்றிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.13.4 ஆம் பந்தியின் பிரகாரம் முரண்களின் சராசரிப் பெறுமதி (அளவில் மாற்றம் ஏற்படுதல் மற்றும் மேலதிக வேலைகளுக்கு பணித்ததன் காரணமாக) அவசர நிகழத்தக்க நிதி ஏற்பாட்டிற்குள் காணப்படுமாக இருந்தால் திணைக்கள தலைவர் / செயற்திட்ட பணிப்பாளரினால் இந்த முரண் கட்டளை | மேலதிக செயற்பாடுகளுக்காக தலைமை அலுவலகத்திடம் அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளதுடன் தவறுதலாக அக்கடிதம் அலுவலக கோவையில் கோவை செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப் படலாம். | |
| (உ) | யாழ்ப்பாண மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்காக புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த உடன்படிக்கையில் தாமதங்கள் சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பான நிபந்தனைகள் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | பெறுகை நடைமுறைக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தாமதக் கட்டணங்கள் அறவிடுவது சம்பந்தமான நிபந்தனை ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். உடன்படிக்கையினைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | யாழ்ப்பாண மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்காக புதிய ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் ஒப்பந்தத்தை வழங்கும் கடிதத்தின் பிரகாரம் அந்நடவடிக்கை பூர்த்தி செய்யும் திகதிகளுக்கிடையில் முரண்பாடுகள் மற்றும் நடைமுறைச் சாத்தியம் என்பதில் சிக்கல் காணப்பட்டது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தை வழங்கும் நடவடிக்கை இடம்பெறுதல் வேண்டும். | ஒப்பந்த உடன்படிக்கையில் குறைபாடுகள் காணப்படுவதுடன் அவற்றை சரிசெய்து உடன்படிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| | --------------------------------------------------- | -------------------- | ----------------------------- |
| (அ) | 04 வாகனங்கள் பயன்படுத்தப்படாது நிறுவன வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் தலைமை அலுவலகத்தில் செயற்படும் நிலையில் காணப்பட்ட 29 மொனிடர்களும் 33 | 1997 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 353 ஆம் இலக்க 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க மற்றும் 2003 சனவரி 03 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கைகளின் | இவ்வாகனங்களை விரைவாக கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | சேர்வஸ்களும் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டன. | பிரகாரம் பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் சம்பந்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது கைதவிர்ப்புச் செய்வதற்கு இனங்காணப்பட்ட ஒரு மோட்டார் சைக்கிள் சம்பந்தமான கைதவிர்ப்பு நடவடிக்கை 2020 ஆம் ஆண்டு வரை இடம்பெற்றிருக்கவில்லை. | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் கைதவிர்ப்பு நடவடிக்கை இடம்பெறுதல் வேண்டும். | விரைவாக கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| யாழ்ப்பாண மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்காக புதிய ஒரு கட்டிடத்தை நிர்மாணிக்கும் போது சரியான கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்படாது பெறுகை அறிவித்தல் வெளியிடப்பட்டதன் காரணமாக இரத்துச் செய்யப்பட்ட விலை மனுக்களைக் கோருவதற்காக ரூபா 94,185 செலவு செய்யப்பட்டிருந்தது. | கேள்வி ஆவணங்கள் சரியாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |

**3.9 முகாமைத்துப பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது குத்தகை காலம் முடிவடைந்த 09 வாகனங்களை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை காலம் முடிவடைந்த வாகனங்களை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |
| (ஆ) | மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தை சுற்றி அத்திவாரமிடப்படாது காணிக்கு மண் நிரப்பியதன் காரணமாக நிரப்பிய மண் மழையினால் அடித்துச் செல்லப்பட்டிருந்தது. | நிரப்பப்பட்ட மண் அடித்துச் செல்வதனை தவிர்க்கும் வகையில் நிலத்தை தயார்ப்படுத்தி மண் நிரப்புதல் வேண்டும். | நிதி ஏற்பாடு இல்லாததனால் அத்தியவாரம் இடுதல் தாமதமடைந்ததுடன் தற்பொழுது இச்செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2019 சனாதிபதி தேர்தல் தொடர்பாக கொழும்பு மாவட்ட / நகர தேர்தல் அலுவலகத்தின் நலன்புரிக் குழுவின் அறிக்கையில் ஊடகங்களினூடாக அறிவிக்கப்பட்டவாறு பதவியணியினர்களுக்கான உணவு நஞ்சடைந்தமை சம்பந்தமான எதுவித தகவலும் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை | குழு அறிக்கையில் அனைத்து சம்பவங்களும் அறிக்கையிடப் படுதல் வேண்டும். | நலன்புரிக் குழுவிற்குப் பொறுப்பான பிரதான தெரிவத்தாட்சி உத்தியோகத்தரிடமிருந்து திருத்திய அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஆணைக்குழுவினால் 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் பயிற்சி திட்டம் தயாரிக்கப்படவில்லை. | 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் பயிற்சித் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |